கிண்ணியா நகர சபை

திருகோணமலை மாவட்டம்

1. நிதிக்கூற்றுகள்

1.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

2016 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2017 மார்ச் 31 ஆம் திகதி கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2016 யூன் 13 ஆம் திகதி கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. 2016 ஆம் ஆண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2017 செப்தெம்பர் 29 ஆம் திகதி சபையின் செயலாளருக்கு வழங்கப்பட்டது.

1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையில் 1.3 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து கிண்ணியா நகர சபையின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.3 நிதிக்கூற்றுக்களின் மீதான கருத்துரைகள்

1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் கணக்கீட்டு குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) புறநெகும செயற்திட்டத்தின் நிதி ஒதுக்கீட்டின் கீழ் ரூபா 6,161,693 பெறுமதிக்கு நிர்மாணிக்கப்பட்டு 2015 ஆம் ஆண்டு சபைக்கு கையளிக்கப்பட்ட சுற்றுலா விடுதி நடைபெற்றுக் கொண்டிருக்கும் வேலைகளின் கீழ் காட்டப்பட்டுள்ளமையினால் நடைமுறையல்லாச் சொத்துக்களின் பெறுமதி அத்தொகையால் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது.

(ஆ) பேரேட்டின்படி கடன் கொடுத்தோர் மீதியானது 2016 திசெம்பர் 31 ஆம் திகதி ரூபா 300,015 தொகையாக காணப்பட்ட போதிலும் அத்திகதியில் உள்ளவாறான ஐந்தொகையில் இம் மீதியானது ரூபா 3,016,376 வரவு மீதியாகக் காட்டப்பட்டமையினால் கடன் கொடுத்தோர் மீதி ரூபா 3,316,091 தொகையால் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது.

(இ) மீளாய்வாண்டில் சுற்றுலா விடுதியின் பயன்பாட்டிற்காக சபையினால் ரூபா 1,707,967 பெறுமதியான தளபாடங்கள் கொள்வனவு செய்யப்பட்ட போதிலும் அது நடைமுறையல்லாச் சொத்துக்களில் ரூபா 1,575,992 தொகையாகக் காட்டப்பட்டமையால் ரூபா 131,975 தொகை குறைத்துக் காட்டப்பட்டிருந்தது.

(ஈ) கடை வாடகைப் பேரேட்டின் பிரகாரம் மீளாய்வாண்டிற்கான வாடகை அறவீடு ரூபா 9,529,633 தொகையாகக் காணப்பட்ட போதிலும் இது வருமானச் செலவுக்கணக்கில் ரூபா 5,919,219 தொகையாக காட்டப்பட்டிருந்தமையினால் கடை வாடகை ரூபா 3,610,414 தொகையாகக் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது.

(உ) பேரேட்டின் படி கேள்வி வைப்புக்கள் ரூபா 4,240,695 ஆகக் காணப்பட்ட போதிலும் நிதிக்கூற்றுக்களில் கேள்வி வைப்புக்கள் மீதி ரூபா 3,554,099 ஆகக் காணப்பட்டது. இதனால் கேள்வி வைப்புக்களின் மீதி ரூபா 686,596 தொகையால் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது.

(ஊ) பெரிய கிண்ணியா மயாணத்திற்கு மின்சார இணைப்புப் பெற்றுக்கொண்டமைக்காக மின்சார சபைக்கு கொடுப்பனவு செய்த வகையில் மாகாண சபையிடமிருந்து பெறப்பட வேண்டியிருந்த ரூபா.477,856 தொகை நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருக்காததால் பெறவேண்டிய கணக்குகளின் மீதி அத்தொகையால் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது.

(எ) மீளாய்வாண்டிற்கான காணி கட்டிடம் மற்றும் பொறி உபகரணங்கள் ரூபா 22,639,18 தொகை கணக்குகளுக்கு கொண்டு வரும் போது செலவுப் பதிவு மூலதன பங்களிப்புக் கணக்கில் பதியப்படாமையால் செலவு மீதி அத்தொகையால் குறைத்துக் காட்டப்பட்டுள்ளது.

(ஏ) மீளாய்வாண்டிற்கான ஐந்தொகையில் சொத்துக்களின் மீதி ரூபா 137,050,753 ஆகவும் பொறுப்புக்களின் மீதி ரூபா 110,708,613 தொகையாகவும் காணப்பட்டமையால் ரூபா 26,342,140 தொகையால் பொறுப்புக்கள் குறைத்துக் காட்டப்பட்டுள்ளது.

### 1.3.2 சட்டங்கள், விதிகள், மற்றும் பிரமாணங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மை

நகர சபைகள் கட்டளைச் சட்டம் (அத்தியாயம் 255) இன் பிரகாரம் மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்களின் சுருக்கத்தை பொது மக்களின் தகவலுக்காக அரசாங்க வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கு சபையால் 2017 ஆகஸ்ட் 02 வரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் படி 2016 திசம்பர் 31 ஆம் திகதி முடிவடைந்த ஆண்டிற்கான நகர சபையின் செயற்பாடுகள் ரூபா 1,331,526 வருமானத்திலும் மிகையான செலவினத்தை விளைவித்திருந்ததுடன் அதற்கு எதிராக முன்னைய ஆண்டின் செயற்பாடுகள் ரூபா 925,243 தொகையான செலவினத்திற்கு மிகையான வருமானத்தினை விளைவித்திருந்தது.

### 2.2 வருமான முகாமைத்துவம்

#### 2.2.1 வருமான சேகரிப்பு செயலாற்றல்

நகரசபையினால் சமர்ப்பிக்கப்பட்டவாறு மீளாய்வாண்டு தொடர்பாக மதிப்பிடப்பட்ட வருமானம், உள்ளபடியான வருமானம் மற்றும் மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறான வருமான நிலுவைகள் என்பன தொடர்பான தகவல்கள் கீழே தரப்படுகின்றன.

| வருமான விடயம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | அறவீடு செய்யப்பட்டது | திரண்ட நிலுவை 31.12.2016 |
|---|---|---|---|
| | ரூபா "000" | ரூபா "000" | ரூபா "000" |
| வீத வரிகள் | 3,500 | 1,455 | 1,273 |
| குத்தகை | 8,471 | 6,569 | 245 |
| சேவைக்கட்டணம் | 2,111 | 2,508 | - |
| அரசிறை வருமானம் | 3,720 | 3,273 | 446 |

#### 2.2.2 வருமான நிர்வாகம்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 08 வருடங்களாக நிலுவையாகக் காணப்பட்ட இறைச்சிக்கடை குத்தகை ரூபா 3,192,518 தொகையையும் மீன் சந்தை குத்தகை ரூபா 6,103,122 தொகையையும்

சேர்த்து கூட்டு மொத்தமான ரூபா 9,295,640 தொகை மீளாய்வாண்டின் இறுதிவரை அறவிடப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 06 வருடங்களாக நிலுவையாகக் காணப்பட்ட வாராந்த சந்தைக் குத்தகைப் பணமாகிய ரூபா 245,722 தொகையும், கோழி இறைச்சிக் கடைகளின் குத்தகைப் பணமாகிய ரூபா 17,666 தொகையும் மீளாய்வாண்டின் இறுதிவரை அறவிட நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

2.2.3 வீதவரிகள் மற்றும் வரிகள்

---

நகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் (அத்தியாயம் 255) 160ஆம் பிரிவுக்கு அமைய, நகர சபையின் அதிகாரத்திற்குட்பட்ட இடங்களில் உள்ள காணிகள் மற்றும் நிர்மாணிக்கப்பட்ட வீடுகள், கட்டிடங்கள் என்பவற்றின் மீது 2006 ஆம் ஆண்டு தொடக்கம் மீளாய்வாண்டின் இறுதி வரை நிலுவையாகவுள்ள ரூபா 1,273,221 கூட்டு மொத்தமான வீதவரிகள் அறவிடப்பட்டிருக்கவில்லை.

2.2.4 தொலைத்தொடர்பு கோபுரங்களுக்கான கட்டணம்

---

சபையின் அதிகார பிரதேசத்தில் தனியார் நிறுவனங்களால் நிறுவப்பட்டுள்ள 04 தொலைத் தொடர்புக் கோபுரங்கள் நிறுவப்பட்டிருந்த போதிலும் அவற்றுக்கான கட்டணத்தைத் நிர்ணயித்து அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

3. செயற்பாட்டு மீளாய்வு

---

3.1 முகாமைத்துவ செயற்திறனின்மை

---

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) ஏனைய நிறுவனங்களிடமிருந்து நன்கொடையாகப் பெற்றுக்கொள்ளப்பட்ட 06 வாகனங்கள் 11 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக சபையினால் பயன்படுத்தப்பட்டு வருகின்ற போதும் அவற்றை சபையின் பெயருக்கு மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) பொதுநிர்வாக அமைச்சின் 03/2017 ஆம் இலக்க 2017 ஏப்பிரல் 19 ஆம் திகதிய சுற்றறிக்கையின் பிரகாரம் சகல அலுவலகங்களிலும் நேரப்பதிவு இயந்திரம் பொருத்தப்பட்டு ஊழியர்களின் உள்வருகை மற்றும் வெளிச்செல்கை உறுதிப்படுத்தப்பட வேண்டுமென கூறப்பட்ட போதிலும் சபையில் அவ்வாறான இயந்திரம் பொருத்தப்பட்டிருக்கவில்லை.

(இ) 2015 ஆம் ஆண்டிற்கான வருடாந்த இருப்புக் கணக்கெடுப்பு சபையினால் ஏல விற்பனைக்காக முன்மொழியப்பட்ட 97 வகையான பொருட்கள் இன்றுவரை அவ்வாறு விற்பனை செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஈ) மாகாண நிதி ஒழுங்கு விதி 432.2, 432.3 இன் பிரகாரம் சபையினால் பயன்படுத்தப்பட்டு வரும் JCB இயந்திரத்துக்குரிய ஓட்டப் பதிவேடு 2016 மார்ச் 15 ஆம் திகதி தொடக்கம் 2017 ஏப்ரல் 06 ஆம் திகதி வரை உரிய அலுவலகரால் பேணப்பட்டிருக்கவில்லை.

3.2 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

---

ஓய்வூதிய திணைக்களத்தின் 2011 பெப்ரவரி 24 ஆம் திகதிய 02/2011 ஆம் இலக்க சுற்றுநிருபத்தின் 4.1 ஆம் பிரிவின் பிரகாரம் உள்@ராட்சி நிறுவனங்களில் அமைய மற்றும் தற்காலிக அடிப்படையில் நியமிக்கப்பட்ட ஊழியர்களுக்காக அரச சேவை சேமலாப நிதியத்திற்கு பங்களிப்பு பணம் செலுத்தப்படுதல் வேண்டும். எனினும் இதற்கு மாற்றமாக சபையில் கடமையாற்றிய ஊழியர்களுக்காக அரச சேவை சேமலாப நிதியத்திற்குப் பதிலாக ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதியங்களுக்கும் பங்களிப்புச் செய்யப்பட்டதுடன் 2012 சனவரி தொடக்கம் 2015 ஏப்ரல் வரை ஊழியர் நம்பிக்கை நிதியத்திற்கான பங்களிப்புப் பணத்தையும், 2014 மார்ச் தொடக்கம் 2015 பெப்ரவரி மாத காலத்திற்கான ஊழியர் சேமலாப

நிதியத்துக்கான பங்களிப்புப் பணத்தையும் குறித்த காலத்தில் செலுத்தாத காரணத்தினால் அந்நிதியங்களுக்கும் ரூபா.482,710 தொகை தண்டப்பணமாகச் செலுத்தப்பட்டிருந்தது.

4. மனிதவள முகாமைத்துவம்

சபையின் செயலாளர் பதவியும், கணக்காளர் பதவியும் கடந்த ஆறு வருடகாலமாக வெற்றிடமாகக் காணப்பட்ட போதிலும் அதனை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

5. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

பின்வரும் ஒவ்வொரு கட்டுப்பாடுகளிற்கு எதிரே சுட்டிக்காட்டப்பட்டுள்ள விடயங்கள் மீது விசேட கவனம் செலுத்த வேண்டும்.

| கட்டுப்பாடுகள் | விசேட கவனம் செலுத்த வேண்டிய விடயங்கள் |
|---|---|
| (அ) கணக்கீடு | (i) பேரேடுகள் நாளது வரையாக முறையாக பேணப்படல். |
| | (ii) சொத்துக்கள் செலவீனங்களின் தன்மை அடிப்படையில் வகைப்படுத்தப்படல். |
| (ஆ) நிலையான சொத்துக் கட்டுப்பாடு | நிலையான சொத்துப் பதிவேடு பேணப்படல். |
| (இ) வருமான அறவீட்டு முகாமைத்துவம் | வருமான நிலுவைகளை அறவிட நடவடிக்கைகள் எடுக்கப்படல். |